# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள் – 05.06.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.CP.4688/F/2024**

| | | |
|---|---|---|
| திரு Y. சுல்தான் | -- | மனுதாரர் |
| /எதிர்/ | | |
| பொதுத் தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர்,<br>தமிழ்நாடு வக்ஃப் வாரியம், எண்.1, ஜாபர் சிராங் தெரு,<br>சென்னை - 600 001. | -- | பொது அதிகார அமைப்பு |

*************

**இறுதி ஆணை**

***இவ்வழக்கு 21.05.2025 அன்று காணொளி காட்சி வாயிலாக விசாரணை மேற்கொண்டு பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து, பொதுத் தகவல் அலுவலர் திரு. ஜனாப் S. சையத் ஜாபர், கண்காணிப்பாளர், தமிழ்நாடு வக்ஃப் வாரியம், சென்னை என்பவர் இன்று (05.06.2025) ஆணையத்தின் முன்பு நேரில் ஆஜராகி, மனுதாரரின் மனுவிற்கு உரிய காலத்திற்குள் தகவல்கள் வழங்காத காரணத்தினால் சென்னை, தமிழ்நாடு வக்ஃப் வாரியம் உதவி செயலாளர் - II / அப்போதைய பொதுத் தகவல் அலுவலரான திரு உமர்பாரூக் என்பவருக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(1)-ன்படி நாளொன்றுக்கு ரூ.250/- வீதம் அதிகபட்சமாக ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்)-ஐ தண்டத்தொகையாக ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான எழுத்து பூர்வமான விளக்கத்தினை அவரிடமிருந்து பெற்று சென்னை, தமிழ்நாடு வக்ஃப் வாரியம், கண்காணிப்பாளர் / தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் இவ்வாணையத்தின் பார்வைக்கும் நேரில் சமர்ப்பித்தார். அப்போதைய பொதுத் தகவல் அலுவலரின் விளக்கத்தினை இவ்வாணையம் ஏற்று, இவ்வழக்கு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.***

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.CP.4688/F/2024</u>**
பெறுநர்
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர்,
தமிழ்நாடு வக்ஃப் வாரியம், எண்.1, ஜாபர் சிராங் தெரு,
சென்னை - 600 001.

**<u>வழக்கு எண்.CP.4688/F/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு Y. சுல்தான், த/பெ. S.K. முகம்மது யூசுப் மரக்காயர்,
எண்.385, சங்கம் தெரு,
கோட்டைப்பட்டினம் - 614 619,
மணமேல்குடி தாலுகா,
புதுக்கோட்டை மாவட்டம்.

Copy to: File
SNPS / 05.06.2025